(Transliteration into English can be found at the end of this document)

வர வேண்டும் கண்ணா நீ நீராட
(நீராட்டல்)

1. கண்ணன் ஒரு இன்பத் தொல்லை

தெருவில் சென்றாய் விளயாட என்று சொல்லியே *
திரும்பி வந்தாய் உடல் முழுதும் புழுதி சூழவே *
விரும்பி உன்னை சீராட்டும் இன்பத் தொல்லையே *
திருவின் திரு வர வேண்டும் கண்ணா நீ நீராட.

2. எட்டாத பரமனும் எட்டும் கண்ணனும்

நான் மறைகள் ஓடித் தேடும் நாரணன் நீ *
தேன் பெருகும் எட்டெழுத்தின் காரணம் நீ *
வான் அடுத்து வையம் அளந்த வாமனன் நீ *
ஊன்றி நின்று வர வேண்டும் கண்ணா நீ நீராட.

3. கண்ணனே பரமன்

பிறக்க பிறக்க பளபளக்கும் மேன்மை உன்னதே *
அளக்க அளக்க அளவிலா அழகும் உன்னதே *
மறக்க மறக்க மயக்குகின்ற மாயை உன்னதே *
சிரிக்க சிரிக்க வர வேண்டும் கண்ணா நீ நீராட.

4. கண்ணனே அவதாரங்கள்

வில் பிடித்து எழுந்த தழும்பு விரைவில் ஆறவே *
கல் பிடித்து குடை கொடுத்த நோவு போகவே *
சொல் பிடித்து ஏற்ற சீற்றம் சற்று தணியவே *
இல் பிடித்து வர வேண்டும் கண்ணா நீ நீராட.

5. கண்ணன்பல அவதாரங்களாய் காத்தல்

அன்று பூமி கிடர்ந்து இடர்ந்தாய் அச்சம் தீரவே *
சென்று பூமி வென்று வந்தாய் வண்மை ஏற்கவே *
இன்று பூமி பரந்து திரிந்தாய் இலகு காட்டவே *
நன்று இரங்கி வர வேண்டும் கண்ணா நீ நீராட.

6. கண்ணனுக்குக் காப்பு

ஒரு கோணத்து இரு ராமனும் கள்ள அழகனே *
திரு வோணம் வந்து உதிக்க தீயவை சரிந்ததே *
முக் கோணம் அங்கு அமர்த்தி காப்பு காணவே *
எக் கணமும் காக்க வேண்டும் கண்ணா நீ நீராட

7. கண்ணன் நீராட்டடம்

திங்கள் தோற்கும் திருமுகம் காட்ட வேண்டியே *
இங்கு மங்கும் அலைந்தது இன்னருள் சுரக்கவே *
தங்கித் திகழும் திருவுடன் பொங்கும் பரிவிலே *
எங்கள் மாசு போக வேண்டும் கண்ணா நீ நிராட.

8. கண்ணன் அருளும் பரமபதம்

புகையின் பின்னே புகுந்திருந்து கீழ் இறங்கவே *
குகையின் உள்ளே குலவுகின்ற சிங்கம் போலவே *
பகை கெடுத்து பரமபதம் பகிர்ந்து கொள்ளவே *
நகை விடுத்து தர வேண்டும் கண்ணா நீ நீராட.

=== === ===

வர வேண்டும் கண்ணா நீ பூச்சூட
(பூச்சூடல்)

1. கண்ணனே இங்கு இன்பம்

விண்ணை விட்டு கீழே வந்த வேத மூலமே *
பண்ணுடன் உன்னைப் பாடும் புண்ணிய காலமே *
மண்ணிலே அருள் செய்யும் மலர் மகள் நாதனே *
கண் குளிர வர வேண்டும் கண்ணா நீ பூச்சூட.

2. கண்ணனின் வீரச் செயல்கள்

அன்று மரம் முறித்து எட்டி அரக்கனை உதைக்கவே *
கொன்று யானையை ஒரு கன்றை விட்டு எறியவே *
வென்று காளை ஏழையும் சென்று மணம் புரியவே *
இன்று காண வர வேண்டும் கண்ணா நீ பூச்சூட.

3. கண்ணனே பிறப்பு அறுப்பவன்

பார்த்தன் தேர் ஊர்ந்து பரியின் வாய் பிளந்து *
பேர் ஆயிரம் உடைய பிறப்பு அறுக்கும் பிரானே *
தீர்த்தனே தூமலர் கொண்டு ஏத்தவே உன்னை *
பூர்த்தியாக வர வேண்டும் கண்ணா நீ பூச்சூட.

4. கண்ணனும் மலையும்

மலை எடுத்துக் காத்ததும் முதுகின் மேல் சுமந்ததும் *
மலையால் கடல் அடைத்து மலை மேல் நின்றதும் *
மலைபோல் திருமேனி அதில் மலர்மாலை அணிந்து *
அலை மகளோடு வர வேண்டும் கண்ணா நீ பூச்சுட.

5. கண்ணா எல்லோருடன் சேர்ந்து வருவாய்

பறவை மேல் விரைந்து வரும் பாற்கடல் பரமனே *
குரவை கூத்தாடி களித்து இருக்கும் கோவலனே *
கற்றினம் மேய்த்துக் கையில் சங்கேந்தி உரைத்து *
நற்றினம் சேர வர வேண்டும் கண்ணா நீ பூச்சுட.

6. கண்ணனின் திருநாமம் எல்லாம் அளிக்கும்

தெரியாது தொட்டாலும் சுடுவது தீ போலே *
அறியாது சொன்னாலும் அருள்வது திருநாமமே *
வெறி கமழும் மல்லியுடன் வனமாலை ஏற்கவே *
திருவுடன் வர வேண்டும் கண்ணா நீ பூச்சூட.

7. கண்ணனுக்கு எட்டு விதமான பூக்கள்

தீங்கு இழையாது தவம் இரக்கம் பொறுமையுடன் *
ஓங்கு புலன் அடக்கி ஓர் நினைவோடு நல்லறிவு *
தங்கு மெய் என்றுமிவை துய்ய மலர் எட்டுமென *
இங்கு பெற வர வேண்டும் கண்ணா நீ பூச்சூட.

8. கண்ணனுக்கு ஸமர்ப்பித்தல்

நறுந்துழாய் மாலை நற் சாந்தம் புகை தீபத்துடன் *
பிருந்தாவன மாயனே பரிந்து வந்து ஏற்பாயே *
மருந்தாகி நீர்மையுடன் மேலான கருந் தெய்வமே *
விருந்து பெற வர வேண்டும் கண்ணா நீ பூச்சூட

=== === ===

வர வேண்டும் கண்ணா நீ விளையாட
(விளையாடல்)

1. கண்ணன் பல அவதாரங்களாய் காத்தல்

வேதங்கள் மூழ்கி செல்ல மீட்டுக் கொடுக்கவே *
பேதங்கள் பல இருக்க திருப் பாதம் காட்டவே *
குறள் உருவாய் வாமனனாய் வான் அளக்கவே *
மருள் நீக்க வர வேண்டும் கண்ணா நீ விளையாட.

2. கண்ணன் பிராட்டியுடன் சுலபனாய் நிற்றல்

தேவர் குழாம் தேடித் தேடி திகைத்து மலைக்கவே *
மூவராய் முதல்வனாய் என் முன்னே நிற்கவே *
பூவளரும் திரு மகளும் சேர்ந்து இருக்கவே *
யாவர்க்கும் வர வேண்டும் கண்ணா நீ விளையாட.

3. கண்ணா நீதான் ராமன்

கூனியின் முதுகிலே அம்பு கோத்த நீ * இந்தப்
பாவியின் மனதிலே அன்பு கொள்ளவே *
தந்தை சொல்லை ஏற்று கானம் சென்ற நீ *
விந்தை செய்ய வர வேண்டும் கண்ணா நீ விளையாட.

4. விஷமக் கண்ணா, நீதான் நரசிம்மன்

தட்டிய தூண் பிளக்க திடுக்கெனத் தோன்றவே *
எட்டி நின்ற பாலனும் ஏவலுடன் ஏத்தவே *
கட்டெறும்பு கன்றின் காதில் விட்டு ஓட்டியே *
சுட்டிப் பயலே வர வேண்டும் கண்ணா நீ விளையாட.

5. கண்ணா, ராமனாய் நீ செய்த வேடிக்கை

**ஆசை கொண்ட அரக்கி அவள் உன்னை அணுகவே *
தாஸ முதல்வன் தம்பியிடம் திருப்பி அனுப்பவே *
நப்பின்னை நாணி நிற்க நம்பி சிரிக்கவே *
சப்பாணி ஆட வேண்டும் கண்ணா நீ விளையாட.**

6. கோபியர் ஆடைகளைக் கவர்தல்

**நீராடச் சென்ற பெண்கள் ஆடையைத் திருடியே *
போராடி வருந்தித் தாமும் கையெடுத்து கூப்பவே *
ஓடி உருள உரலிலே உன் கட்டுண்ட காட்சியே *
தேடிக் காண வேண்டும் கண்ணா நீ விளையாட.**

7. கண்ணனின் ராஸக் கிரீடை

**இசையோடு குழல் ஊதி உந்தன் இன்ப மயக்கமே *
அசைந்து ஆடும் கோபியர் வளையின் ஒலி தாளமே *
பல உருவாய் பெண் அனைத்திலும் நெருங்கி மகிழவே *
நலம் மிக ஆட வேண்டும் கண்ணா நீ விளையாட**

8. கண்ணன் வாய் உள்ளே உலகம் அனைத்துமே

**உண்ட மண்ணை மாயன் காட்ட வாய் திறக்கவே *
அண்ட சராசரம் அனைத்தும் அதனுள் அடக்கமே *
நீண்ட கண்ணாள் யசோதை பெற்ற இன்பமே *
தொண்டர் காண வேண்டும் கண்ணா நீ விளையாட.**

=== === ===

என் கண்ணே தாலேலோ

(பள்ளி கொள்ளல்)

1. கண்ணா உன்னை நினைத்து அஞ்சுகிறேன்

சென்ற இடம் எல்லாம் வம்பு கொண்டாய் மாதவா *
வென்ற பகை முற்றும் யார் அறிவார் வேங்கடவா *
கன்று மேய்த்து உகந்தாய் கார் குழல் கேசவா *
இன்று போதும் இவை என் கண்ணே தாலேலோ.

2. கண்ணா நீயே பரமன்

பாதம் எடுத்து வான் அளந்த பரந்தாமா *
வேதம் வந்து தாலாட்டு பாட வேண்டுமா? *
காதல் கொண்டு கதறுகிறேன் கண் மணியே *
ஆதலால் போதும் இவை என் கண்ணே தாலேலோ.

3. கண்ணனை பற்றி முறையீடு

எல்லை உண்டோ அன்னைமார் எண்ணிறத்த பட்டியல் *
தொல்லை செய்தாய் நீயென்று தொடுக்கின்ற முறையீடு *
சொல்லினால் சூடு பட்டேன் சோதனை தாளவில்லை *
அல்லல் பட்டது போதும் என் கண்ணே தாலேலோ.

4. கண்ணனை பற்றி தூற்றல்

எள்ளி நகைத்து பேசியே உன் வாசனை தூற்றியே *
தள்ளிப் போயென அறியாதார் குற்றமெல்லாம் சாற்றியே *
பள்ளி கொண்ட பெருமானே பதறுகின்ற அன்னை நான் *
அள்ளி அணைக்க அருகே என் கண்ணே தாலேலோ.

5. கண்ணா உன்னை நினைத்து அஞ்சுகிறேன்

**வஞ்சகப் பெண் தாயாகி வந்து உன்னை அணைக்கவே *
அஞ்சுகிறேன் அச்சுதா அவள் போல் எத்தனையோ *
நெஞ்சுருகி வேண்டுகிறேன் நெடுமாலே கிடப்பாயோ *
துஞ்ச வேண்டி அழைத்தேன் என் கண்ணே தாலேலோ.**

6. கண்ணா எங்கும் போகாதே, இங்கே இரு.

**ஏழை நான் புலம்பினேன் ஏசுகின்றார் என் மகனை *
சூழ்ந்து நின்று புறம்பேசும் பாழும் மக்கள் ரோதனை *
போக வேண்டாம் எங்கும் பொல்லாங்கும் வேண்டாம் *
ஆகவே உறங்காயோ என் கண்ணே தாலேலோ.**

7. நான் என்ன தருவேன்?

**ஆலிலையில் துயில் கொண்டாய் அனைத்துக்கும் பின்னே *
பாற்கடலில் பள்ளி கொண்டாய் பாம்பணை மெத்தையிலே *
வான்வீடு வந்து அமர்ந்தாய் விண்ணவர் பணி செய்யவே *
நான் என்ன தருவேனோ? என் கண்ணே தாலேலோ.**

8. மாதவனே உறங்காயோ

**விடம் கலந்த நாகம்மேல் நடனம் செய்த திருநாரணா *
வடமலையில் விடுதலை தரும் விஷ்ணுவே வாசுதேவா *
குடங்கள் மேல் கூத்து செய்த அரங்கனே கோவிந்தா *
கடல் கடைந்த மாதவனே என் கண்ணே தாலேலோ.**

=== === ===

vara vENDum kaNNA nI nIRADa
(nIrATTal)

1. kaNNan oru inbat tollai

teruvil cenRAi viLaiyADa enRu solliyE *
tirumbi vandAi uDal muzhudum puzhudi sUzhavE *
virumbi unnai sIrATTum inbat tollaiyE *
tiruvin tiru vara vENDum kaNNA nI nIrADa.

2. eTTAda paramanum eTTum kaNNanum

nAn maRaigaL ODit tEDum nAraNan nI *
tEn perugum eTTezhuttin kAraNam nI *
vAn aDuttu vaiyam aLanda vAmanan nI *
UnRi ninRu vara vENDum kaNNA nI nIrADa.

3. kaNNanE paraman

piRakka piRakka paLapaLakkum mEnmai unnadE *
aLakka aLakka aLavilA azhagum unnadE *
maRakka maRakka mayakkuginRa mAyai unnadE *
cirikka cirikka vara vENDum kaNNA nI nIrADa.

4. kaNNanE avatArangaL

vil piDittu ezhunda tazhumbu viraivil ARavE *
kal piDittu kuDai koDutta nOvu pOgavE *
sol piDittu ERRa cIRRam caRRu taNiyavE *
il piDittu vara vENDum kaNNA nI nIrADa.

5. kaNNan pala avatArangaLAi kAttal

anRu bhUmi kiDarndu iDarndAi accam tIravE *
cenRu bhUmi venRu vandAi vaNmai ERkavE *
inRu bhUmi parandu tirindAi ilagu kATTavE *
nanRu irangi vara vENDum kaNNA nI nIrADa.

6. kaNNanukku kAppu

oru kONattu iru rAmanum kaLLa azhaganE *
tiru vONam vandu udikka tIyavai sarindadE *
muk kONam angu amartti kAppu kANavE *
ek kaNamum kAkka vENDum kaNNA nI nIrADa.

7. kaNNan nIrATTam

tingaL tORkum tirumugam kATTa vENDiyE *
ingum angum alaindadu innaruL surakkavE *
tangit tigazhum tiruvuDan pongum parivilE *
engaL mAsu pOga vENDum kaNNA nI nIrADa.

8. kaNNan aruLum paramapadam

pugaiyin pinnE pugundirundu kIzh iRangavE *
gugaiyin uLLE kulavuginRa singam pOlavE *
pagai keDuttu paramapadam pagirndu koLLavE *
nagai viDuttu tara vENDum kaNNA nI nIrADa.

==========

vara vENDum kaNNA nI pUccUDa
(pUccUDal)

1. kaNNanE ingu inbam

viNNai viTTu kIzhE vanda vEda mUlamE *
paNNuDan unnaip pADum puNNiya kAlamE *
maNNilE aruL ceyyum malar magaL nAdanE *
kaN kuLira vara vENDum kaNNA nI pUccUDa.

2. kaNNain vIrac ceyalgaL

anRu maram muRittu eTTi arakkanai udaikkavE *
konRu yAnaiyai oru kanRai viTTu eRiyavE *
venRu kALai Ezhaiyum cenRu maNam puriyavE *
inRu kANa vara vENDum kaNNA nI pUccUDa.

3. kaNNanE piRappu aRuppavan

pArttan tEr Urndu pariyin vAi piLandu *
pEr Ayiram uDaiya piRappu aRukkum pirAnE *
tIrttanE tUmalar koNDu EttavE unnai *
pUrttiyAga vara vENDum kaNNA nI pUccUDa.

4. kaNNanum malaiyum

malai eDuttuk kAttadum mudugin mEl sumandadum *
malaiyAl kaDal aDaittu malai mEl ninRadum *
malaipOl tirumEni adil malarmAlai aNindu *
alai magaLODu vara vENDum kaNNA nI pUccUDa.

5. kaNNA nI elloruDan sErndu varuvAi *

paRavai mEl viraindu varum pARkaDal paramanE *
kuravai kUttADi kaLittu irukkum kOvalanE *
kaRRinam mEyttu kaiyil sangEndi uraittu *
naRRinam cEra vara vENDum kaNNA nI pUccUDa.

6. kaNNanin tirunAmam ellAm aLikkum

teriyAdu toTTAlum cuDuvadu tI pOlE *
aRiyAdu connAlum aruLvadu tirunAmamE *
veRi kamazhum malliyuDan vanamAlai ERkavE *
tiruvuDan vara vENDum kaNNA nI pUccUDa.

7. kaNNanukku eTTu vidamAna pUkkaL

tIngu izhaiyAdu tavam irakkam poRumaiyuDan *
Ongu pulan aDakki Or ninaivODu nallaRivu *
tangu mey enRumivai tuyya malar eTTumena *
ingu peRa vara vENDum kaNNA nI pUccUDa.

8. kaNNanukku samarppittal

naRuntuzhAi mAlai naR cAndam pugai dIpattuDan *
birundAvana mAyanE parindu vandu ERpAyE *
marundAgi nIrmaiyuDan mElAna karun deyvamE.
virundu peRa vara vENDum kaNNA nI pUccUDa.

==========

vara vENDum kaNNA nI viLaiyADa
(viLaiyaDal)

1. kaNNan pala avatArangaLAi kAttal

vEdangaL mUzhgi cella mITTuk koDukkavE *
bEdangaL pala irukka tirup pAdam kATTavE *
kuRaL uruvAi vAmananAi vAn aLakkavE *
maruL nIkka vara vENDum kaNNA nI viLaiyADa.

2. kaNNan pirATTiyuDan sulabanAi niRRal

dEvar kuzhAm tEDit tEDi digaittu malaikkavE *
mUvarAi mudalvanAi en munnE niRkavE *
pUvaLarum tiru magaLum sErndu irukkavE *
yAvarkkum vara vENDum kaNNA nI viLaiyADa.

3. kaNNA nIdAn rAman

kUniyin mudugilE ambu kOtta nI * indap
pAviyin manadilE anbu koLLavE *
tandai sollai ERRu kAnam senRa nI *
vindai seyya vara vENDum kaNNA nI viLaiyADa.

4. vishamak kaNNA, nIdAn narasimman

taTTiya tUN piLakka diDukkenat tOnRavE *
eTTi ninRa bAlanum EvaluDan EttavE *
kaTTeRumbu kanRin kAdil viTTu OTTiyE *
cuTTip payalE vara vENDum kaNNA nI viLaiyADa.

5. kaNNA nI rAmanAi nI seyda vEDikkai

Asai kONDa arakki avaL unnai aNugavE *
dAsa mudalvan tambiyiDam tiruppi anuppavE *
nappinnai nANi niRka nambi cirikkavE *
cappANi ADa vENDum kaNNA nI viLaiyADa.

6. gOpiyar vastrangaLai kavardal

nIrADac cenRa pengaL ADaiyait tiruDiyE *
pOrADi varundit tAmum kaiyeDuttu kUppavE *
oDi uruLa uralilE un kaTTuNDa kATciyE *
tEDik kANa vENDum kaNNA nI viLaiyADa.

7. kaNNanin rAsak kirIDai

isaiyODu kuzhal Udi untan inba mayakkamE *
asaindu ADum gOpiyar vaLaiyin oli tALamE *
pala uruvAi peN anaittilum nerungi magizhavE *
nalam mikka ADa vENDum kaNNA nI viLaiyADa.

8. kaNNan vAi uLLE ulagam anaittumE

uNDa maNNai mAyan kATTa vAi tiRakkavE *
aNDa sarAsaram anaittum adanuL aDakkamE *
nINDa kaNNAL yasodhai peRRa inbamE *
toNDar kANa vENDum kaNNA nI viLaiyADa.

==========

en kaNNE tAlElO
(paLLi koLLal)

1. kaNNA unnai ninaittu anjugiREn

cenRa iDam ellAm vambu koNDAi mAdhavA *
venRa pagai muRRum yAr aRivAr vEnkaTavA *
kanRu mEyttu ugandAi kAr kuzhal kEsavA *
inRu pOdum ivai en kaNNE tAlElO.

2. kaNNA nIyE paraman

pAdam eDuttu vAn aLanda parantdAmA *
vEdam vandu tAlATTu pADa vENDumA? *
kAdal kONDu kadaRugiREn kaN maNiyE *
AdalAl pOdum ivai en kaNNE tAlElO.

3. kaNNanai paRRi muRaiyIDu

ellai uNDO annaimAr eNNiRatta paTTiyal *
tollai seydAi nIyenRu toDukkinRa muRaiyIDu *
collinAl cUDu paTTEn sOdanai tALavillai *
allal paTTadu pOdum en kaNNE tAlElO.

4. kaNNainai paRRi tURRal

eLLi nagaittu pEsiyE un vAsanai tURRiyE *
taLLip pOyena aRiyAdAr kuRRamellAm cARRiyE *
paLLi koNDa perumAnE padaRuginRa annai nAn *
aLLi aNaikka arugE en kaNNE tAlElO.

5. kaNNA unnai ninaittu anjugiREn

vajjagap peN tAyAgi vandu unnai aNaikkavE *
anjugiREn accudA avaL pOl ettanaiyO *
nenjurugi vENDugiREn neDumAlE kiDappAyO *
tunja vENDi azhaittEn en kaNNE tAlElO.

6. kaNNA engum pOgAdE, ingE iru

Ezhai nAn pulambinEn EsuginRAr en maganai *
cUzhndu ninRu puRam pEsum pAzhum makkaL rOdanai *
pOga vENDAm engum pollAngum vENDAm *
AgavE uRangAyO en kaNNE tAlElO.

7. nAn enna taruvEn?

Alilaiyil tuyil koNDAi anaittukkum pinnE *
pARkaDalil paLLi koNDAi pAmbaNai mettaiyilE *
vAnvIDu vandu amarndAi viNNavar paNi seyyavE *
nAn enna taruvEnO? en kaNNE tAlElo.

8. mAdhavanE uRangAyO

viDam kalanda nAgam mEl naDanam seyda tirunAraNA *
vaDamalaiyil viDudalai tarum vishNuvE vAsudEvA *
kuDangaL mEl kUttu seyda aranganE gOvindA *
kaDal kaDainda mAdhavanE en kaNNE tAlElo.

==========

(Thanks to Smt. Kalyani Krishnamachari for the help in English transliteration)